



முதலமைச்சர் அவர்களின் மனதுக்கு நெருக்கமான 'நான் முதல்வன்' மற்றும் 'புதுமைப்பெண்' திட்டங்களால் பயன்பெற்று வரும் மாணவ – மாணவியருடன் ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடினார். அதுபோது பெற்றோரை இழந்ததால் உயர்கல்வி எனும் கனவு கைகூடாமல் போய்விட, திருமணம் – குழந்தைகள் என்றான பின்பும், புதுமைப்பெண் திட்டத்தின் உதவியால் கல்லூரிக்குச் சென்றுகொண்டிருக்கும் கவுந்தம்பாடி பிரேமா, அரசுக் கல்லூரியில் தமிழ் படித்தாலும், நான் முதல்வன் திட்டம் மூலம் COMMUNICATIVE ENGLISH கற்றுத் தேர்ந்த அறிவானந்தம் இப்படி இன்னும் பல முதல்தலைமுறை பட்டதாரிகளின் வாழ்வில் புதுமைப்பெண்ணும் – நான் முதல்வனும் ஒளியேற்றி வைத்திருக்கின்றன என்றும், இத்திட்டங்கள் தந்த ஏற்றத்தால் மகிழ்ச்சியும் – உற்சாகமும் பொங்க நம் இளைஞர்கள் கூறிய நம்பிக்கை வார்த்தைகள், நெகிழ்ச்சியைத் தந்தன என்றும் வாழ்த்தியதோடு விரைவில் வரவுள்ள 'தமிழ்ப்புதல்வன்' திட்டம், இன்னும் பல தலைமுறைகளை கைதூக்கி விடும் என்று உரையாற்றி, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பை பெற்ற 3,784 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பணி நியமன கடிதங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

## உங்கள் பெற்றோரின் அக்கறையோடுதான்,

# நம் முதலமைச்சர் திட்டங்களைச் செயல்படுத்துகிறார்!

## 'நான் முதல்வன்' திட்ட மாணவர்களுடன் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துரையாடல்!

ஈரோடு, ஆக. 4–

**ஈரோட்டில், நான் முதல்வன் திட்டப் பயனாளிகளான மாணவர்களுடன் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பேசினார்.**

**அப்போது அவர் ``உங்கள் பெற்றோரின் அக்கறையோடுதான், நம் முதலமைச்சர் திட்டங்களைச் செயல்படுத்துகிறார்"என்று அவர் குறிப்பிட்டார்.**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் , கலந்துரையாடலின் போது பேசியதாவது:**





நம் திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதோடு மட்டும் நிற்பதில்லை. அந்தத் திட்டம் எந்த அளவுக்கு அந்தப் பயனாளிகளுக்குச் சென்றடைகிறது, ஒவ்வொரு திட்டமும் நம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் என்ன மாதிரியான மாற்றங்களை உண்டாக்குகிறது என்பதை, கண்காணித்துப் பின்பற்றுவது தான் நம் திராவிட மாடல் அரசு.

இதைத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் அனைத்து அமைச்சர்களுக்கும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அதனால்தான் இன்றைக்கு `புதுமைப்பெண்' மற்றும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயன்பெறும் உங்களையெல்லாம் சந்தித்து, உங்களுடைய கருத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று இங்கு வந்திருக்கிறோம்.

### 'நான் முதல்வன்' திட்டம்!

அரசுப் பள்ளியில் படித்த மாணவிகள் உயர் கல்வியில் கல்லூரியில் சேரும்போது நம் அரசின் சார்பாக 'புதுமைப்பெண்' திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. அதே போல் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் லட்சக்கணக்கான இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி, வேலைவாய்ப்பு போன்ற விஷயங்களை நம் 'திராவிட மாடல்' அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

உங்களின் இந்தக் கருத்துகள் இந்தத் திட்டங்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கு நிச்சயம் உதவி செய்யும். 'நான் முதல்வன்', 'புதுமைப்பெண்' திட்டங்களை இன்னும் வலிமையான திட்டங்களாக முக்கியமான திட்டங்களாக மாற்றும்.

'புதுமைப்பெண்' திட்டம் மூலமாக இதுவரைக்கும் மூன்று லட்சத்திற்கும் அதிகமான மாணவிகள் பயன்பெற்றிருக்கிறீர்கள். குறிப்பாக, இந்த ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 11 ஆயிரம் மாணவிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றிருக்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் உங்களின் பெற்றோர் உங்களின் எதிர்காலம் குறித்து, எவ்வளவு அக்கறையோடு இருப்பார்களோ அதே அக்கறையோடுதான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

### இந்தியாவிலேயே முதல் இடம்!

இன்னும் சொல்லப்போனால், உயர்கல்வியில் சேர்வோர்களின் எண்ணிக்கை 51 சதவிகிதம் என்ற நிலையில், இந்தியாவிலேயே முதல் இடத்தில் தமிழ்நாடுதான் இருக்கிறது. அதற்குக் காரணம் நம் மாண்புமிகு முதலமைச்சர், நம் அரசு மற்றும் இங்கு வந்திருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் நீங்கள்தான்.

ஒட்டுமொத்த இந்தியாவையும் எடுத்துக்கொண்டால், பல மாநிலங்களில், உயர் கல்வியில் சேர்வோர்களின் சதவிகிதத்தை அடுத்த 10 ஆண்டுகளில் எப்படி 50 சதவிகிதமாவது உயர்த்துவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில், தமிழ்நாடு மட்டும்தான் உயர்கல்வியில் சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை 51 சதவிகிதத்திலிருந்து அதை எப்படி நூறு சதவிகிதமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நம் முதலமைச்சர் அவர்களும் நம் அரசும் செயல்பட்டு வருகின்றனர்.

### 31 லட்சம் மாணவர்கள்

இதுதான் நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சியின் சிறப்பு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உயர்கல்வி படித்தால் மட்டும் போதாது. வேலைவாய்ப்புக் கிடைக்க வேண்டும். அதற்குத் தேவையான திறன்களை அந்த நிறுவனங்களின் மூலமாகவே, நீங்கள் அடைய வேண்டும். அதற்கு அந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களைப் பெரிய பெரிய வேலைகளுக்குத் தகுதியானவர்களாக உருவாக்குவதும், நம் அரசின் கடமை.

**"உயர்கல்வியில் சேர்வோர்களின் எண்ணிக்கை 51 சதவிகிதம் என்ற நிலையில், இந்தியாவிலேயே முதல் இடத்தில் தமிழ்நாடுதான் இருக்கிறது. அதற்குக் காரணம் நம் முதலமைச்சர், நம் அரசு மற்றும் இங்கு வந்திருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் நீங்கள்தான்."**

அந்தக் கடமையைத்தான் 'நான் முதல்வன்' திட்டம் செய்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 31 லட்சம் மாணவர்கள் இந்த 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயனடைந்து இருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தால் பயனடைந்த இளைஞர்கள் ஒரு லட்சம் முதல் 30 லட்சம் வரையிலான ஆண்டு வருமானம் சம்பளத்தில் வேலை வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறீர்கள். உங்கள் அத்தனை பேருக்கும் என் வாழ்த்துகள்.

இந்த ஈரோடு மாவட்டத்தில் மட்டும் சுமார் ஒரு லட்சம் மாணவர்களுக்கு இந்த 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளீர்கள். சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளீர்கள். கல்லூரிகளில் மட்டுமல்ல பள்ளி மாணவர்கள் உயர்கல்வியில் என்ன படிக்கலாம் என்று நம் 'நான் முதல்வன்' திட்டம் உங்களுக்கெல்லாம் வழிகாட்டுகிறது. தொடக்கப் பள்ளியில் சேர்கின்ற பிள்ளைகளுக்குக் காலை உணவு திட்டத்தின் மூலம் உணவளிப்பதில் இருந்து அந்தக் குழந்தை பள்ளிப் படிப்பை முடித்து, அதன் பிறகு உயர் கல்வியையும் முடித்து, நல்ல வேலையில் சேர்கின்ற வரைக்கும் அனைத்து நிலைகளிலும் நம் திராவிட மாடல் அரசு அவர்களுக்கும் உங்களுக்கும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமை அடைகிறேன்.

இளைஞர்களுக்குச் சமமாக, இன்னும் சொல்லப்போனால் மாணவர்களைவிட அதிகமான அளவில் மாணவிகள் வந்திருக்கிறீர்கள். உங்களின் கருத்துகளைச் சொல்லி இருக்கிறீர்கள். ஒரு நூறு வருடத்திற்கு முன்பு பெண்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது உங்களுக்குத் தெரியும். ஒரு 50 வருடத்திற்கு முன்பு பெண்களுக்கு எதற்கு படிப்பு என்று கேட்ட ஒரு கும்பலும் இருந்தது.

### திராவிட மாடல் அரசு

நம் மாணவர்களின் கல்வியைக் கெடுப்பதற்கு யார் முயற்சி செய்தாலும் எத்தனை சூழ்ச்சிகள் நடந்தாலும், அதை இந்த 'திராவிட மாடல்' அரசு முறியடிக்கும் என்ற உறுதியை இந்த நேரத்தில் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





உங்களின் கவனம் முழுவதும் படிப்பதிலும், நல்ல வேலைக்குச் சென்று உங்களின் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வதில் மட்டும்தான் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேலைக்குச் சென்றால் மட்டும் போதாது, நீங்கள் தொழில்முனைவோராக உருவாகி, நீங்கள் நான்கு பேருக்கு வேலை கொடுக்கிற அந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் நம் 'திராவிடமாடல்' அரசு உங்களுக்குச் செய்யும்.

### ஏன்? எதற்கு? எப்படி?

தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணில் உங்களை எல்லாம் சந்தித்துப் பேசி இருக்கிறேன். 'தமிழர்கள் படிக்க வேண்டும், உரிமைகளைப் பெற வேண்டும், சுயமரியாதை உணர்வோடு இருக்க வேண்டும், எதையும் ஏன்? எதற்கு? எப்படி? என தைரியமாகக் கேள்வி கேட்க வேண்டும்' என்று நமக்குச் சொல்லிக் கொடுத்த ஊரில் பிறந்த நீங்களும், பெரியார் சொன்னது போல் பல நல்ல கேள்விகளைக் கேட்டிருக்கிறீர்கள். நல்ல கருத்துகளைச் சொல்லி இருக்கிறீர்கள். நல்ல பயனுள்ள தகவல்களை இங்கு பகிர்ந்து கொண்டுள்ளீர்கள்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற உங்கள் அனைவரின் வருங்காலம் சிறக்க எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதே மாதிரி இந்த சிறப்புக்குரிய, அறிவுப்பூர்வமான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.வெங்கடாசலம், மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறையின் செயலாளர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் இன்னொஸன்ட் திவ்யா, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுங்காரா, மாநகராட்சி ஆணையர் டாக்டர்.மணீஸ், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் துணைச் செயலாளர் பிரதாப் , உதவி ஆட்சியர் ராமகிருஷ்ணன்,

துணை மேயர் செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் மற்றும் கல்லூரி முதல்வர் உள்ளிட்ட பேராசிரியர்கள், மாணவர்கள், நான் முதல்வன் திட்டப் பயனாளிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், உட்பட பலரும் கலந்துகொண்டனர்.